ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

कृपापाथोराशिस्त्वमिति वहसि ख्यातिमधिकां
मदन्यो दीनोऽम्ब त्रिजगति जनो नास्ति नियतम् ।
ततोऽहं संरक्ष्यो झटिति कृपया रक्षसि नचेत्
ध्रुवं सा त्याज्याव्याख्या मदनरिपुकान्ते तव भवेत् ॥

𑌕𑍃𑌪𑌾𑌪𑌾𑌥𑍋𑌰𑌾𑌶𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿𑌵𑌹𑌸𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌮𑌧𑌿𑌕𑌾𑌂
𑌮𑌦𑌨𑍍𑌯𑍋 𑌦𑍀𑌨𑍋𑌽𑌮𑍍𑌬 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌤𑌿𑌜𑌨𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌿𑌯𑌤𑌮𑍍 ।
𑌤𑌤𑍋𑌽𑌹𑌂 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑍋𑌝𑌟𑌿𑌤𑌿𑌕𑍃𑌪𑌯𑌾 𑌰𑌕𑍍𑌷𑌸𑌿 𑌨𑌚𑍇𑌤𑍍
𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌸𑌾𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌮𑌦𑌨𑌰𑌿𑌪𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑍇𑌤𑌵𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

மன்மதனுக்குச்சத்ருவான ஸ்ரீபரமேசுவரருக்குப் பார்வையாய் விளங்கும் ஹே கௌரி நீ கருணைக்கடல் என்கிற பெயரால் அதிகமான பிரஸித்தியை அடைந்திருக்கிறாய். மூவுலகையும்சுற்றிப்பார்த்தாலும் என்னைக்காட்டிலும்பிடிப்பற்ற தீனமான ஜனம் வேறு இல்லை என்பது திண்ணம். ஆகையால் கருணைக்கடலான நீ உன் கிருபையால் என்னைத்தான் முந்திப் பாதுகார்க்க வேண்டும். இந்த விஷயத்தில் நீ அநாதரவாயிருந்தால் வெகு காலமாய் எங்கும் பிரஸித்தி பெற்று விளங்கும் கருணைக்கடல் என்கிற பெயரை விடும்படி நேரும் உன் பெருமைக்கு அது உசிதமில்லை.

ஒருவன் விசேஷ ஐசுவர்யத்தைப் பெற்றிருந்தால் உணவிற்கில்லாமல் வருந்தும் ஏழை ஜனங்களைப் பாதுகார்ப்பது தான் அதற்கு முக்கியமான பயனேயல்லாமல் வேறுவிதம் செலவு செய்தால் அவ்வளவு முக்கியமாகாது. அவ்விதம் கருணை என்கிற விசேஷமான செல்வத்தையடைந்திருக்கும் தேவியும் மிகவும் தீனனாய் கஷ்டப்படும் என்னை சீக்கிரமாக ரக்ஷித்து அவளுடைய பெயரை வீணாக்காமல் ஸபலமாகச் செய்து கொள்ள வேண்டுமென்று ஒரு பக்தர் பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவ-ஹு மாசி-மீ ௪௨


## ஸம்ஸ்காரம்.

### 6-வது அன்னப்பிராசனம்.

(40-வது பக்கத்தொடர்ச்சி)

இது ஓர் ஸம்ஸ்காரமாம். சில ஸ்மிருதிகளில் அன்னப் பிராசனத்திற்கு முந்தி காது குத்துவது, குழந்தையை வெளியில் கொண்டு வருவது முதலிய சில காரியங்கள் அதிகமாக விதிக்கப்படுகின்றன. அவை ஸம்ஸ்காரத்திற் சேராததுபற்றி சிலவிடங்களில் கூறப்படாவிடினும் அவசியம் செய்யவேண்டியவையாகும். சிசுவுக்குப் பல் முளைப்பதற்கு முந்தியே அன்னையின் மடியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, கார்த்திகை மாதத்திலாவது தை, சித்திரை, பங்குனி இவைகளிலாவது சுக்கிலபக்ஷத்தில் சுப தினத்தில் ஒருநூலை இரட்டைமடிப்பாயிருக்கும்படி ஊசியில்கோர்த்துக்கொண்டு அந்த ஊசியால் இரண்டு காதுகளைக்குத்தி அந்த ஊசியை எடுத்துவிட்டு அந்த நூலை முடிந்து வைத்து புண்ணிருந்தால் ஆரிப்போன பிறகு இரத்தினமிழைத்த ஸுவர்ணத்தை இரு காதுகளிலும் போடவேண்டியது. இம்மாதிரி குத்த வேண்டியதற்காகவே தைவவசமாகக் காதுகளில் துவாரமிடப்பட்டிருக்கிறதாம். வெய்யிலில் படும்படி காதுகளைப் பார்த்தால் அந்தவிடம் தெரியுமாம். இதன் விவரம் அஷ்டாங்க ஹிருதயத்தில் உத்தரஸ்தானத்தில் முதலாவது அத்தியாயத்தில்,

जरायुमात्र प्रच्छन्ने रविरश्म्यवभासिते ।
धृतस्य निश्चलं सम्यगलक्तक रसाङ्किते ॥
विध्येद्दैवकृते छिद्रे सकृदेवर्जु लाघवात् ।
नोर्ध्वं नपार्श्वतो नाथशिरास्तत्र हि संश्रिताः ॥

ஜராயுமாத்ர ப்ரச்சன்னே ரவிரஶ்ம்யவபாஸிதே ।
த்ருதஸ்ய நிஶ்சலம் ஸம்யகலக்தக ரஸாங்கிதே ॥
வித்யேத்தைவக்ருதே சித்ரே ஸக்ருதேவர்ஜு லாகவாத் ।
நோர்த்வம் நபார்ஶ்வதோ நாதஶிராஸ்தத்ர ஹி ஸம்ஶ்ரிதா: ॥

“ஸூர்யகிரணத்தில் குழந்தையை அசையாமலிருக்கும்படி நன்ருய் பிடித்துக்கொண்டு காதில் வெய்யிலில் பார்த்தால் தைவத்தா லிடப்பட்ட துவாரம் பிரகாசிக்கும் சின்னத்தோலால் மறைபட்டது போலிருக்கும் அந்தவிடம் பார்த்து செம்மஞ்சிக் கொழம்பை ஒரு ஈருக்கில் தோய்த்துக்கொண்டு அடையாளம் செய்து விட்டு வெய்யிலில்லாத வெளிச்சமுள்ள விடத்தில் கிழக்கு முகமாய் அன்னையின் மடியில் குழந்தையை உட்கார்த்திவைத்து இடதுகையால் காதைப் பிடித்துக்கொண்டு வலதுகையில் வைத்துக்கொண்ட ஊசியால் அடையாளமிட்டவிடம் பார்த்து ஒழுங்காக இலகுவாய் ஒரே தடவையில் குத்தவேண்டும். அந்த அடையாளமிட்ட இடத்திற்கு மேலேயோ, பக்கங்களிலேயோ கீழேயோ குத்தக் கூடாது. ஏனெனில் ஆங்கு நரம்புகள் இருக்கின்றன” என்பாதாதியால் கூறப்படுகின்றன.

அந்த நரம்புகளுக்கு காளிகா, மர்மரீ; ரக்தா என்று பெயராம். அவைகளில் குத்திவிட்டால் வலி, இரத்தம், ஜ்வரம், வீக்கம் முதலியன உண்டாகுமாம். சரியானவிடத்தில் குத்திவிட்டால் வலிக்காது, இரத்தம் வாராது, மற்ற உபத்திரவங்களும் உண்டாக மாட்டாது. ஆண் குழந்தைக்கு முதலில் வலது காது குத்திய பிறகு இடதுகாது குத்தவேண்டும். பெண் குழந்தைக்கு முதலாக இடது காது குத்தியபிறகு வலதுகாது குத்தவேண்டும். பனிநாளில் காதுகுத்துவது விசேஷமாம். நான்காவது மாதத்தில் சிசுவை கிருஹத்தில் வெளியிலிருந்து கொண்டுவா வேண்டும். பிறகு பன்னிரண்டாவது நாளிலாவது மூன்ருவது மாசத்திலாவது இதைச்செய்யலாம். இப்படிநாள் பார்த்துவெளியில்கொண்டுவந்த குழந்தைக்கு சூரியதரிசனம், சந்திரதரிசனம், ஆகும்படிசெய்ய வேண்டும் இது அன்னப்ப்ராசனத்திற்கு முந்தி செய்யப்பட வேண்டும். காது குத்துவதுக்கு மாதக் கணக்கு அஷ்டாங்கஹிருதயத்தில் **षट्सप्तमाष्टमासेषु** ஷட்ஸப்தமாஷ்டமாஸேஷு என்று 6, 7, 8-வது மாதங்களில் செய்யலாமென்று கூறப்படுகின்றது. முகூர்த்தக்கிரந்தங்களில் பிறந்த பன்னிரண்டாவதுநாளும் பத்தாவது மாதமும் அதிகமாகக் கூறப்படுகின்றது. அப்தபூர்த்தி (ஆண்டு நிறைவி) தினத்தன்றும் ஆசாரத்தில் செய்து வருகிருர்கள். அன்னப் பிராசனம் ஆருவது மாதம் முதலிய காலங்களில் செய்யவேண்டியது. சுபம்!

**பத்திராதிபர்.**

# ஓர் அனுதாபக் கூட்டம்.

திருவானைக்கோயில் ஸ்ரீ ஜகத்குரு சங்கர ஸம்ஸ்கிருத காலேஜியின் சார்பாக, மதராஸ் ஸம்ஸ்கிருதகலாசாலை பிரின்ஸிபால் மகாமகோபாத்தியாய சாஸ்திரரத்னகரமீமாம்ஸா வெங்கடசுப்பா சாஸ்திரிகள் அவர்கள் திடீரென 2-2-28 வியாழனன்று பரகதியடைந்ததைக் குறித்து ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷண பிரம்ம ஸ்ரீ V. S. வெங்கடராமசாஸ்திரிகள் அவர்களது அக்கிராஸனத்தின் கீழ் 5-2-28 ஞாயிற்றுக்கிழமை ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

வெங்கடசுப்பாசாஸ்திரிகள் அவர்கள்கல்விமான்களுக்கு உறைவிடமான திருவிசைநல்லூரைச் சார்ந்தவர். அத்வைத வேதாந்தத்தில் மிகுந்த பாண்டித்யமுள்ள அவர் காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய ராமசுப்பாசாஸ்திரிகள் அவர்களுடைய சிஷ்யராவர். அவர் மாணவர்கள்பால் மிகுந்த அன்புடன் ஸம்ஸ்கிருத கலாசாலை தலைவர் பதவியை மிகவும் திறமையாக வகித்துவந்துள்ளார். தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் கல்விமான்கள் யாவராலும் போற்றப்பட்டவராய், மீமாம்ஸாசாஸ்திரத்திற்கே பாரதநாட்டின்கண் நிகாற்ற ஜோதியாக விளங்கி வந்த அன்னாரது பிரிவையறிய மிகவும் விசனிக்கிறோம். எங்களது அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் அவரைச் சார்ந்த பலருக்கும்ஆர்ய தர்மம் வாயிலாகத்தெரியப்படுத்திக்கொள்கிறோம்

R. நடராஜன்.

---

## விவாஹவயதுமசோதா கண்டனங்களின் சுருக்கம்.

(செம்மங்குடி.)

தஞ்சைஜில்லா நன்னிலம் தாலூக்கா செம்மங்குடி கிராமத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸன்னதியில்ஸ்ரீமான் பி ஏ வி சுந்தரேசய்யரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதில் டில்லி சட்டஸபையில் ஹரிவிலாஸ்சாரதாவாலும், சென்னை சட்டஸபையில் முத்துலக்ஷ்மி அம்மாளும் கொண்டுவரப்போகும் மசோதாவானது இந்துக்களுடைய சாஸ்திரங்க

ளுக்கும் ஆசாரங்களுக்கும் மதக்கொள்கைகளுக்கும் மதவிஷயத்தில் தாம் பிரவேசிப்பதில்லை என்று வாக்களித்த மாக்ஷிமைதங்கிய கனம் விக்டோரியா மஹாராணி அவர்களுடைய கொள்கைக்கும் நேர் விரோதமாயிருப்பதாலும் இந்த மசோதா சட்டசபையில் பிரவேசிக்கக் கூடாதென்றும் இதில் அரசாங்கத்தார் தலையிடக் கூடாதென்றும் நாம் இப்பொழுது தீர்மானம் செய்து ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் அறிவிக்கவேண்டுமென்று R. பட்டாபிராமய்யரவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரபணையை M S. சுந்தரேசய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு மற்றுமுள்ள ஸகல ஜனங்களாலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு இந்த தீர்மானத்தை ராஜப்ரதிநிதிக்கும் கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்விதமே ஆங்காங்கு கண்டன ஸபைகள் கூடி அறிவிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எஸ் சுந்தரேசய்யர்,
காரியதரிசி செம்மங்குடி

## மருங்கூர்

சென்ற 4-2 28 நன்னிலம்தாலூகா மருங்கூர் கிராமத்தில் ஸ்ரீசுந்தரேச்வர ஆலயத்தில் ஸ்ரீகுப்புஸ்வாமிஅய்யரவர்கள் அக்ராஸனத்தின் கீழ் கூடிய மஹாஸபையில் எ. ராஜுசாஸ்திரியவால் கொண்டுவரப்பட்ட விவாஹவயது மசோதா கண்டன பிரேரபணையை K. V. கிருஷ்ணஸ்வாமிஅய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் மஹாஜனங்களும் அங்கீகரித்து அவ்விதமே விவாஹவயது மசோதாவை சட்டசபைகளில் பிரவேசிக்கும்படி செய்யக் கூடாதென்று ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர்அவர்களுக்கும் விக்ஞாபனம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது,

A. ராஜுசாஸ்திரிகள், காரியதரிசி

## இராமேசுவரம்.

சென்ற 30-1-28 இவ்வூர் ஜகத்குரு சங்காராசார்யஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதிபதி அவர்களின் அனுக்கிரக பூர்வகமாக ஒரு மகாஜனஸபை கூடிற்று. அதில் பிரம்மஸ்ரீ வெங்கிடாசல தீக்ஷிதரவர்களின் அக்ராஸனத்தின் கீழ் பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணியசாஸ்திரிகள் பிரம்மஸ்ரீ சின்னண்ணுசாஸ்திரிகள் முதலான பல வித்வான்களும் மற்றுமுள்ள லௌகிகர்களுமாக சுமார் 600 ஜனங்கள் வந்திருந்தார்கள். அச்சபையின் தீர்மான

மாவது தற்காலம் சட்டசபைக்குக் கொண்டுவரப்போவதாக வெளியிட்டிருக்கும் விவாகவயதுமசோதாவானது அனுஷ்டானத்திற்கும் யுக்திக்கும் சாஸ்திரங்களுக்கும் அனுபவத்திற்கும் நமது மாக்ஷிமை தங்கிய விக்டோரியாமஹாராணி அவர்களின் மதவிஷயத்தில் பிரவேசிப்பதில்லை என்ற உருதியான பிரதிக்ஞைக்கும் முற்றிலும் விரோதமாக இருப்பதோடும் இவ்வித சட்டத்தால் அரசாங்கத்திற்கோ பிரஜைகளுக்கோ எவ்விதப் பிரயோஜனமும் இல்லாததாலும் ஜனங்களுக்குப் பலவிதத்திலும் விபரீதத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஆகையால் இச்சீர்திருத்தக்காரர்களுடைய விஷய முயற்சிகளை இம்மஹாஸபை பலமாகக் கண்டிப்பதுடன் மாக்ஷிமைதங்கிய ராஜாங்கத்தார் இம்மசோதாக்களையும் ஆதரிக்காமலும் சம்மதம் கொடுக்காமலும் அடியோடு தள்ளிவிடும்படிச் செய்யவேணுமாய் கனம் ராஜப்பிரதிநி அவர்களை இம்மஹாஸபை வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறது. ஷை தீர்மானத்தின் காபிகளும் முறையே கனம் ராஜப்ரதிநிதியவர்களுக்கும் கனம் சென்னை கவர்னர் துரையவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

A. Y. நாராயணகனபாடிகள்

இராமேசுவரம்

# சென்னை வர்ணாச்ரம ஸபை.

(48-வது பக்கத்தொடர்ச்சி)

இதைக்கண்டு பல அப்ராம்மண பத்திரிகைகள் அங்ஙனமிடமளிப்பது அவர்களை அவமதிப்பதாகும். சுயமரியாதைக்குத் தீங்கிழைக்கும் என ஆரவாரம் செய்தன. சேலம் ஜில்லா மஹாநாட்டின் உபசரணைத்தலைவர் தனதுபன்யாஸத்தில் இங்ஙனமே கூறி இடமளிக்காவண்ணம் பலமுயற்சிகள் செய்தனர். கமிட்டிக் கூட்டத்திலும் பலத்த விவாதம் நடந்தது. ஆனல் மதாபிமானியான உபசரணைத் தலைவரது முயற்சியால் இச்சபைக்கும் இடமளிப்பதாக கடிதம் வந்தது. ஆனல் பல அஸௌகரியங்களால் வேறு இடத்திலேயேநடத்த நேர்ந்தது.

பற்பலவிடங்களிலிருந்து மஹாஜனங்கள் ஆதரவளித்தனர் ஸ்ரீ கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியாளது பரம அநுக்ரஹம் பொருந்திய இணையற்ற லோகதந்திரம் நிறைந்த (ஸ்ரீ. யு. பி. கிருஷ்ணமாசாரியாருடன் கலந்து நடத்து என) எனக்கு வந்த ஸ்ரீமுகம் சர்மாவுடன் கலந்து நடத்து என ஸ்ரீ. யு. பி. கி. ஆசாரியாருக்கு வந்த ஸ்ரீ முகம் இருவர்களையும் ஒன்று சேர்த்து ஓரிடத்தே நடத்தும்படித் தூண்டியது முதல் அஸதிவாரம். ஸ்ரீமதாசாரியாள் அநுக்ரகமே பிறகு யானியற்றிய சிறிய கமிட்டியில் சிலரைச் சேர்த்து ஓர் வரவேற்பு ஸபை ஏற்படுத்தினேம். அதன் தலைவர் ராவ்ஸாஹேப் ரங்கநாதஞ் செட்டியார் உபதலைவர். ஸ்ரீ கயப்பாக்கம் ஸாதாசிவசெட்டியாரவர்கள் பி. எ. நிர்வாகக் காரியதரிசி ஸ்ரீமான் யு. பி. கி. ஆசாரியாரும் பரிஷத்காரியதரிசி அடியேனுமாவோம்.

தக்க பக்கபலமிருப்பதால் திருவல்லிக்கேணியிலேயேஇதை நடத்துவதென தீர்மானித்தோம். பிறகு பல கனவான்களை இதற்குத் தலைமை வகிக்கும்படி கடிதங்கள் மூலமாகவும் நேரிலும் கேட்டுக்கொண்டதில் அவர்களுக்கு ஸௌகரியமில்லை என்று தெரிவித்து விட்டார்கள்.

அப்பால் என் பொருப்பைப் பங்கிட்டுக் கொண்ட ஸ்ரீ யு பி கிருஷ்ணமாசாரியாருடன் சில காரணங்களை முன்னிட்டு ஓர் ஸ்ரீ வைஷ்ணவரைத் தேர்ந்தெடுப்பது உசிதமென்றெண்ணி வேதாந்த தீபிகை பத்திராதிபராயிருந்தவரும் வடமொழியில் நல்ல பாண்டித்யம் வாய்ந்தவரும் விசிஷ்டாத்வைதத்தில் பூர்ண பிரக்ஞையுள்ளவருமான உ. வெ. பிரம்மஸ்ரீ ந. ஸ்ரீனிவாஸாசாரியார்பிஏபிஎல் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தோம்.

பண்டிதர்களுக்கு அழைப்பு:— தென்னாட்டிலுள்ள ஸகல பண்டிதர்களுக்கும வரும்படிஅழைப்புக்கடிதமஅநுப்பப்பட்டது. அத்துடன் கீழ்க்கண்ட விஷயங்களைக்குறித்து சுருதி ஸ்மிருதி யுக்த்யநுபவ சிஷ்டாசாரங்களுக்கநுகுணமாக வ்யாஸம் எழுதி அநுப்பும்படியும் கேட்கப்பட்டது. ஸபையறிக்கையோடு இதையும் சேர்த்து அச்சிடுவதாக உத்தேசம். வர்ணம் பிறப்பாலா அல்லது ஷை தர்மம் மோக்ஷஸாதனமா அல்லவா? 2. விதவா ருதுமதீ விவாஹங்களுக்கு இடமுண்டா? 3. விஜாதீயஸஹ பங்க்தி

போஜனத்தால் வரும் தீமையென்ன?4. சண்டாள ஜாதி தீண்டா மைக்குப்பிரமாணம்யாது? 5 சூத்திரன் என்றசப்தத்திற்குவேசீபுத் ரன்எனப்பொருளுண்டா? 6 ஆலயங்களுக்கு தேவதாஸி ஸேவை அவசியமா ? என்பதுபோன்ற பத்து விஷயங்கள் கேழ்க்கப்பட் டன. பற்பல பண்டிதர் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் வ்யாஸ மெழுதி அனுப்பினர். நூற்றிருபத்தைந்து பிரசித்தமான பண்டி தர்களுக்கு ஆஹ்வாநபத்திரம் சென்றது. அனேகமாக யானறிந்த வரையிலும் மற்றும் சிலர் ஸஹாயத்தைக்கொண்டும் வடநாட்டி லும் தென்னாட்டிலுமுள்ள எல்லோரையுமே அழைத்தோம். வர் ணாச்ரம தர்மத்திற்கு விரோதமாய் தீண்டாமையில்லை என்றும் ருதுமதீ விவாஹம் செய்யலாமென்றும் சொல்லிக்கொண்டிருக் கும் பண்டிதர்களை ஸபையில் வாதத்திற்கு அழைத்தும்அனுவசிய மான காரணங்களைக் காட்டிவராமலிருந்துவிட்டார்கள்.

முதல் தினத்தில் ஓர் ஸம்பவம்:— 29-12-27 காலை திருவல் லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் வாத்ய கோஷத்துடன் தலைவரை ஊர்வலமாக அழைத்து வந்து 1500-ஜனங்களுக்கு இடையே வேதகோஷத்துடன் சாந்திபுரஸ்ஸரமாக ஸபை துவக்கப்பட்டது. உபசாரணைத் தலைவர் தனது அச்சிட்ட உபந்யாஸத்தைப்படித்து தலைவரை அக்ராஸனத்திற்குப் பிரேரித்தார். ஸ்ரீ ஸதாசிவசெட்டி யார் பி. ஏ. அதை ஆமோதித்தார். மற்றும் சிலரதை ஆதரித்த னர். தலைவர் கரகோஷத்தினிடையே தலைமைவஹித்து தனது ஆங்கிலத்தில்அச்சிட்டப்பிரஸங்கத்தைப்படித்தார். இதனிடையில் ஸப்யர் அனைவரும் ஸபை குறிப்பிட்ட "சுருதிஸ்மிருதி புராண சிஷ்டாசாரப்படி வ்யாக்யானம் செய்யப்பட்டு அநுஷ்டானத்தி லிருக்கும் வர்ணாச்ரமதர்மத்தைஆக்ஷேபமின்றிஅங்கீகரிக்கிறேன்" என ஓர் கடிதத்தில் கையெழுத்திட்டு டிக்கட்டு பெற்றே உள்ளே செல்லவேண்டும் என ஓர் கண்டிப்பு ஏற்படுத்தியது. அதற்குடன் பட்டு அனைவரும் வந்தனர்.

தலைவருபன்யாஸத்திற்குப் பிறகு பிரதிவாதி பயங்கரம் மடாதிபதி ஸ்ரீ அநந்தாசாரிஸ்வாமிகளின் ஸந்தேசத்தை ஸம்ஸ் கிருதத்தில் அச்சிடப்பட்டது. அடியேன் ஸபையில் படித்தேன். மற்றும் பலர் வருவதற்கு முடியாமலநுப்பிய தந்திகளும் கடிதங் களும் மகா-ா-ஸ்ரீ N. கிருஷ்ணசாமி அய்யங்காரவர்கள் BA, BL, மதுரை வக்கீல் படித்தார்.

பதினொரு மணிக்கு ஸபை கலைந்தது. வந்திருந்த பண்டிதர்களில் அவசியமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், ஸ்மார்தர்களுக்கும் தனித்தனியே பாகம் செய்து வைச்வதேவம் செய்விக்கப்பட்டது ஸ்மார்தர்களில் பலர் பரான்னநியமாதிகள் வைத்திருந்ததால் வெகு சிலரே அங்கு வந்தனர். பகல் மூன்று மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டியில் மறுநாள் வரக்கூடிய தீர்மானங்களைப் பற்றியவாதம் நடந்தது. சிலஸமயம் அக்ராஸனருக்கு அடங்காமலும் சில ஸமயம ருசிகரமாகவும வாதம நடந்தது. மஹாஜனங்களிடையே இத்தர்மம் பூர்ண ஜீவகளையோடு எவ்வளவு உத்ஸாஹத்தை யுண்டுபண்ணுகிறதென்பதை நன்கு அறிவித்தது

வந்திருந்த பண்டிதர்கள்:— பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வெங்கிடசுப்பாசாஸ்திரிகள், ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபால், மஹாமஹோபாத்தியாய லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியார், (மைசூர்) மஹாமஹோபாத்தியாய ஸ்வாமிநாதய்யர், அத்வைத ஸபாதயக்ஷர் பிரம்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள், காஞ்சீ காமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரியஸ்வாமிகள் அவர்களது ஆஸ்தான பண்டிதர் பிரமமஸ்ரீ பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷணம் வரகூர் வெங்கிடராமசாஸ்திரிகள், ஷை மடம் ஜம்புகேஸ்வரம வேதாந்தபாடசாலை ஆசாரியர் பிரம்மஸ்ரீ திருவையார் விச்வநாதசாஸ்திரிகள், ஷை மடம் ஆஸ்தானவித்வான் கவிரத்னம் மஹோபதேசக ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள், கவிகுஞ்சரம் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், (மதுரை) ஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள் திருநெல்வேலி ராஜவல்லபசாஸ்திரிகள், திருச்சி போலகம் சுந்தரசாஸ்திரிகள் திருச்சி பத்மநாபசாஸ்திரிகள் சிதம்பரம் ராகவசாஸ்திரிகள் மரூர் கணேசசாஸ்திரிகள் சேங்காலிபுரம் வைத்தியநாதசாஸ்திரிகள் சிவகங்கை சிரௌதிகள், உ. வெ. அபிநவபட்டபாண R. V. கிருஷ்ணமாசாரியார் இஞ்சிமேடு ரங்காசாரியார் கொடைவாசல் நரஸிம்மாசாரியார் திருவாதி திருமலைதாதாசாரியார் திருப்பதி ஸ்ரீநிவாஸாசாரியார் (பிரஸித்த பண்டிதர்களில் வந்திருந்தவர்களில் சிலர் பெயர் மறந்துவிட்டது, மன்னிக்கவும்) காஞ்சி தாதாசாரியார் கிருஹ்யக்ஞஉமாமஹேச்வர சாஸ்திரிகள் முதலிய வெளியூர் பண்டிதர்களும் உள்ளூர் ப்ரபல பண்டிதர்களும் ஸாமான்ய பண்டிதர்களில் பலருமாக நூற்றுக்

கணக்கானவர் வந்திருந்தனர். பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரிகள் லக்ஷ்மணசூரி தண்டபாணிதீக்ஷிதர் இவர்கள் உடம்பு அசௌக்கியத்தால் வரமுடியவில்லை.

லௌகிகர்கள்—கோயம்புத்தூர் வெங்கிட்டரமணய்யங்கார் M. L மதுரை ராமய்யங்கார் M.L.,A. திருநெல்வேலி A. K. சுந்திரய்யர் BA ,BL ராமனுதபுரம் ஸம்ஸ்கிருத ஸ்கூல் ஹெட்மாஸ்டர் கிருஷ்ணசாஸ்திரிகள் B.A.,L.T M. ராமய்யர் முடிகொண்டான்மிராசுதார் திண்டுக்கல் கங்காதரதீக்ஷிதர் பி. ஏ. எல் டி. வக்கீல் ராமச்சந்திரய்யர் நாராயணஸாமிய்யர், தாதாசாரி ரிடைட்ஜட்ஜ், கோதண்டராமாநுஜநாயடு அம்பலவாணஸ்வாமி மணவாளஸ்வாமி (இதிலும் மதுரைகும்பகோணம் திருச்சி ஈரோடுமுதலியவிடங்களிலிருந்து வந்த வக்கீல் உத்யோகஸ்தர்கள் பெயரை மறந்து விட்டேன் அதை மன்னிக்கவும்) முதலிய பற்பல லௌகிக அபிமானிகளும் வந்திருந்தனர். மூன்றுநாளும் சபை நிறைந்தே மகாஜனங்கள் கூடியிருந்தார்கள். பிரதிதினம் இரவு 8-மணிமுதல் 11-மணி வரையில் பற்பல பண்டிதர்கள் பரிஷத்தாகக் கூடி அருமையான உபன்யாஸங்களைச் செய்தனர். எண்ணிறந்த ஜனங்கள் ஊக்கத்துடன் கேட்டுவந்தனர். முதலிரவு பிரம்மஸ்ரீ தர்மக்ஞ போலகம் சுந்திரசாஸ்திரிகள் வேதப்ரமாணம் என்பதைப்பற்றி அழகாக ஓர் பேருபன்யாஸம் செய்தார்.

இரண்டாம்நாள்:— மறுநாள் காலை தீர்மானங்கள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டன. அதில் முதலில் அதை ப்ரேரிப்பவர் ஓர் மகாபண்டிதராகவும் ஆமோதிப்பவர் ஓர் பட்டம்பெற்ற லௌகிகராகவும் ஆதரிப்பவர் ஓர் பிராமணரல்லாதாராகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தீர்மானங்கள் அதிகமாக இருந்ததாலும் பற்பலருக்கு அவகாசமளிக்கவேண்டியிருந்ததாலும் அவரவர்மனப்படி பேச அவகாசமளிக்க முடியவில்லை. அதற்கெனவே பரிஷத் ஏற்படுத்தப்பட்டது.

பண்டிதமாளவ்யா

காங்கிரஸிற்கு வந்த பண்டித மாளவ்யா இங்கு வந்து பண்டிதர்களிடம் கலந்து பேச ஆசைகொண்டார். ஓர் தக்க பெரிய மனிதர்மூலம் தனக்கு அழைப்புக்கிடைக்குமா ? என விசாரித்தார். ஆதலால் அவரை வரும்படி அழைத்தோம். வந்தார் அவருடன் ஸ்ரீ காவ்யகண்டரும் வி. கே. பாலசுப்ரமணிய அய்யர் BABL

அவர்களும் வந்தார்கள். நிர்வாககாரியதரிசி வாயற்படியில் வரவேற்று மாளவ்யா சொற்படி இருவரை உள்ளே விட்டார். ஸ்ரீ சாஸ்திரிகளையும் விடும்படி ஒருவர்சொல்ல கையெழுத்திட்டே வரவேண்டுமென்றார். மாளவ்யாவிடம் அந்த உறுதிமொழிப்பத்திரம் அளிக்கப்பட்டது. முதலில் அதில் கேட்டபடி ஜாதி தந்தை பெயர் உத்யோகம் இருப்பிடம் அனைத்தும் எழுதி கையெழுத்திட்டார். உறுதிமொழியண்டை போகும்போது தயங்கி உங்கள் வ்யாக்யானம் யாதெனயானறியேன். ஆதலால் கையெழுத்திடுவது உசிதமல்ல என்றார். அவர்வரவை ஆமோதித்துக் கையெழுத்திடாததால் அவருக்கு ஸபையில் பேச அவகாசமில்லை எனக்கூறி ஸபை துவக்குவதற்குமுன் ஒரு மணி தனியாக அவகாசமளிக்கப்பட்டது.

மிகவணக்கத்துடன் பண்டிதர்களது தாஸன் புத்திரன் பாததூளி அவர்களிடமிருந்து ஏதேனும் நல்ல விஷயத்தைத் தான் க்ரஹித்துக்கொண்டுபோகவே வந்ததாகவும் ஆனால் மகம்மதியர்களும் கிருஸ்துவர்களும் நம்மதத்தினரை தினேதினே கொள்ளை கொள்ளுகின்றனர். நம்மவரிலும் மந்திரம் மந்திரார்த்தமறியாமலும் அநுஷ்டானம் ஸரியாகச் செய்யாமலிருப்பதால் நமது மதம் க்ஷீணித்து வருகின்றது. ஆதலால் நமது புராணங்களில் படன் நா:' என்றே காணப்படுவதால் நாஸாமான்யர்களான யூரோப்பியரும் மற்ற விதேசியர்களுங்கூட இதை அறிய படிக்க அதிகாரிகளாவார்கள் அப்படியிருக்க நம் தேசத்திலுதித்த சகல ஜாதிகளுக்கும் ப்ரணவத்துடன் பஞ்சாக்ஷரீ அஷ்டாக்ஷரீ முதலிய மந்திரங்களை ஏன் உபதேசிக்கக் கூடாது. உபநயநாதி ஸம்ஸ்காரங்களைச்சரியான காலத்தில்செய்ய நாங்கள் ஊரிலுள்ளவயதான எல்லாக்குழந்தைகளையும் ஓரிடத்தில் சேர்த்து வீண் செலவைக் குறைக்கிறோம். நீங்களுமதைப் பின்பற்றலாம் என்பதுபோன்ற பொதுவான உபன்யாஸத்தை எளிய ஸம்ஸ்கிருதத்தில் அழகாக ஒருமணிக்குமேல் பல புராண சுலோகங்களோடு உபன்யஸித்தார் பண்டிதர்களது பதிலைக்கேட்க ஆவலுடன் இருப்பதால் இரவு பரிஷத்திற்கு வருவதாகக்கூறிச் சென்றார். கூறியபடி இரவில் வரவில்லை. எங்கள் வழக்கப்படி பதினொரு மணிவரை கும்பகோணம் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் விவா

கம் என்பதைப்பற்றியும், இஞ்சிமேடு ரங்காசாரியார் தீண்டா மை என்பதைப் பற்றியும் உபன்யாஸம் செய்தார்கள்.

மூன்றும் நாள்:— வழக்கப்படி காலை 8-மணிமுதல் 11மணி வரை பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பலர்பேசுவதற்கு தனக்கு அவகாசமில்லையேயென ஆயாஸப்பட்டனர். பகலில் பல தீர்மானங்கள் நிறைவேறியபின்ப்ராஸ்போடோகாரரால் படமெடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரையும் வந்தனோபசாரமும் முடிந்துசபை பூர்த்தியானது. அன்றிரவு ஆவலுடன் அவகாசத்தை எதிர்பார்த்த தேதியூர் பிரும்மஸ்ரீ கவிகுஞ்சர சுப்ரமணியசாஸ்திரிகள் கேள்வியில்கண்டபத்துவிஷயங்களைக்குறித்தும் ஹாஸ்ய ரசம்ததும்ப அத்யத்புதமாகஉபன்யஸித்தார்.

வந்தனோபசாரம்:— மறுநாள் (4-வது) காலை 8-மணிக்கு பரிஷத்கூடி உபநிஷத் பாராயணம் செய்தபின் வந்த பண்டிதர்களுக்கும் மூன்றும் வகுப்புப் பிரயாணப்படி மாத்திரம் அளிக்கப்பட்டது. அடியேன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தக்க சம்பாவனை செய்ய முடியாததற்கு மன்னிக்கும்படி வேண்டினேன். இதுகூட இல்லாமல் தாங்கள் வர சம்மதிப்பதாகவும் இவ்வளவு சிரமப்பட்டு சபையைக்கூட்டியவர்களுக்கு ஈசுவரன் பூர்ணஆயுளை யளிக்கும்படி ஆசீர்வதித்தார்கள்.

அன்றிரவு யான் வெளியூருக்குக் கிளம்பியதால் அன்று முதல் மூன்று நாள் உபன்யாஸம் தேதியூர் சாஸ்திரிகளால் நடந்ததை நன்கறியேன். இவ்வளவு அழகாக நடக்கக்காரணமாயிருந்த ஆண்டவன் ஸ்ரீமதாசாரியாள் பண்டிதரத்னங்கள் முதலிய அனைவர்களுக்கும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் மறுமுறைசெய்கிறேன். வர்ணாச்ரமம் வாழ்க ! குரு வாழ்க ! பண்டிதர்வாழ்க !

வரவு செலவு:— நான் சொந்தமாக ப்ரசாரம் செய்தபோதும் தனியாகத் தானே கொடுத்ததைப்பெற்றேன். அவ்வகையில் 20. ரூ. என்னிடம் வரவு. கடிதங்கள் அச்சுரசீது ப்ரயாணச்செலவு உள்ளூர் பண்டிதர் பெரிய மனிதர்களைப் பார்க்க வண்டிச் செலவுஇவைகளில் செலவு ரூ.24-4-0இவ்வதிகச்செலவையானே வகித்தேன். இதன் பிறகு எனக்கு வந்த மணியார்டர்களை ஸபை பொக்கிஷதாரிடம் அனுப்பிவிட்டேன். அவர்களே வரவு செலவுகளைக் கூறவேண்டியவராயினும் யானறிந்தவரை ஸ்தூலமாகப்

பொது ஜனங்களுக்கு அறிவிக்கக்கடமைப்பட்டிருப்பதால் இதை எழுதுகிறேன். ஒரு ஸமயம் இதில் தவறுதல் இருக்கலாம். அதை காரியதரிசி அல்லது பொக்கிஷதார் திருத்தட்டும்.

ஸ்ரீ கும்பகோணம் மடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காராசாரிய ஸ்வாமிகள், ரூ. 100. அகோபிலமடம் ரூ. 50 பிரதிவாதிபயங்கர மடம் ரூ. 50. யு. பி. கி. ஆசாரியர் வசூல் ரூ. 30. A. K. சுந்திரய்யர் ரூ. 20 மதுரை வக்கீல் N. கிருஷ்ணசாமி அய்யங்கார்மூலம், ரூ. 200. சில்லரை' ரூ 50. ஆக ஐநூறு ரூ 500. அச்சு செலவு, தபால், வண்டிச்சத்தம், விளக்கு, ஸமாஸ்தாபோஜனவசதி தந்தி, பண்டிதர்களுக்கு ஸம்பாவனை இன்னும் இதரச் செலவுவகையில் மேற்கொண்டு ரூ 100-க்கு மேல் செலவாயிருப்பதால் அதை உபசபணைத் தலைவர் மூலம் பூர்த்தி செய்யலாம்

ஸோமதேவசர்மா.

## விவாஹவயது மசோதாக் கண்டனக் கூட்டங்கள்.

### ஒழுகுசேரி.

இந்தக் கூட்டமானது சென்ற 9—2—28ல் கும்பகோணம் தாலூகா ஒழுகுசேரியில் பிரும்மஸ்ரீ என். ராமநாதய்யர்அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் பல கிராமங்களிலிருந்தும் வந்திருந்த பல நூற்றுக்கணக்கான ஜனங்களால் சூழப்பட்டிருந்தது. அந்த ஸமயம் இஞ்சிக்கொல்லை வி. ஜகதீசசாஸ்திரியவர்கள் ஷை மசோதாவினால் ஏற்படும் கஷ்டங்களை நன்குஎடுத்துக்காட்டி உபன்யஸித்தார்கள். பிறகு ஸபையிலுள்ள ஸகல ஜனங்களும் ஏகமனதாய் இந்த மசோதாவைக் கண்டித்து இதைச் சட்டசபையில் பிரவேசிக்கும் படி செய்யக்கூடாதென்று ராஜப்பிரதிநிதி அவர்களையும் சென்னை கவர்னர் அவர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

எம் நாகநாதய்யர்.
அக்ராஸனர்.

### திருமங்கலக்குடி.

தஞ்சாவூர் ஜில்லா திருமங்கலக்குடி அக்கிரகாரத்தில் 10-2-28ல் கூடிய மஹாஸபையில் பிரும்மஸ்ரீ ம. பாலசந்திரய்யர் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் அடியில்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும்கொண்டு வரப்போகிற விவாகவயது நிர்ணய மசோதாவானது இந்துக்க

ளின் சாஸ்திரங்களுக்கும், ஆசாரங்களுக்கும், மதத்திற்கும், க்ஷேமத்திற்கும் நேர்விரோதமாயிருப்பதால் அதை இந்த ஸபையால் அழுத்தமாய்க் கண்டிக்கப்பட்டு இது சட்டமாகக்கூடாதென்று கனம் டில்லி, ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கனம் கவர்னர் அவர்களுக்கும் மஹஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

A. ஜகதீசய்யர்.

---

சிதம்பரம்.

10—2—28ல் சிதம்பரம் மேலமடத்தில் மடாதிபதிகளான அகோரசிவாசார்யஸ்வாமிகளவர்கள் ஆதரவின்பேரில் ராஜமன்னார்குடி மஹோபதேசக பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரியளவர்கள் அக்ராஸனத்தின்கீழ் சிறந்த பல பண்டிதசிகாமணிகளால் நிறைந்த பெரிய ஸபையில் விவாக விஷயமாய் தற்காலம் டில்லி ஸபையிலும் சென்னை சபையிலும் கொண்டுவரப்போகும் மசோதாவானது இந்தியாவிலுள்ள ஸகல ஆஸ்திகர்களுக்கும் வைதிக லௌகிக மார்க்கங்களுக்கும் முற்றிலும் விருத்தமாயும் அதிகமான துன்பங்களை விளைவிக்கக்கூடியதாயுமிருக்கின்றது. ஆகையால் இந்த மசோதா சட்டமாகக்கூடாதென்று எல்லாரும் ஏக மனதாய் கண்டித்து கவர்னருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அக்ராஸனாதிபதியைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களும்அதை அங்கீகரித்து கனம் மஹாராணி அவர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் மதஸம்பந்த விஷயத்தில் ராஜாங்கத்தார் தலையிடக் கூடாதென்று கவர்ன்மெண்டுக்கு ஷை ஸபையின் தீர்மானத்தை அனுப்பியிருக்கிறார்கள். அசேஷபிராமண மஹாஜனங்கள்,

சிதம்பரம்.

---

கும்பகோணம்,

6—2—28மாலை 7-மணிக்கு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமடத்தில் ஒரு மஹாஜனஸபைகூடிற்று. அதில் பிரபலர்பிரும்மஸ்ரீகே.சுந்தரராமய்யர் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். சாஸ்திர ரத்நாகரம் பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரியள் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக ப. பஞ்சாபகேசசாஸ்திரியள் முதலான பல பண்டிதர்களும் பிரும்மஸ்ரீ வக்கீல் மஹாலிங்கய்யர் பிரும்மஸ்ரீ ஸ்ரீமடம் ஏஜண்டு வக்கீல் குப்புஸ்வாமி அய்யர், பிரும்மஸ்ரீ வக்கீல் ஜீ. வெங்கட்டராமய்யர், பிரும்மஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யர்

முதலான பல லௌகிகப் பிரபுக்களுமாக சுமார் 600 ஜனங்கள் வரையில் வந்திருந்தார்கள். கனம் அக்ராஸனர் அவர்கள் விவாக வயது மசோதாவால் ஏற்படும் கஷ்டங்களை சுமார் அரைமணி நேரம் ஸ்பஷ்டமாக எடுத்துக்கூறினார்கள். பிறகு யக்ஞஸ்வாமி சாஸ்திரியளவர்கள் சாஸ்திரீயமாக ஏற்படும் பல தோஷங்களையும் அனுஷ்டானத்திற்கும் நம் ஹிந்து மதத்திற்கும் இது மிகவும் விரோதமென்று நன்கு விளக்கிக்காட்டினார்கள்., அப்பால் ப. பஞ்சாபகேசசாஸ்திரியள் அவர்கள் இந்த மசோதாவால் எவ்விதப் பிரயோஜனம் ஏற்படுமென்று சொல்லுகிறார்களோ அந்தப் பயன் அற்பங்கூடக் கிடைக்கமாட்டாதென்று நன்கு நிரூபித்துஇதனால் ஏற்படும் பலவிதமான கஷ்டங்களையும் எடுத்துக்காட்டினார்கள். பிறகு ஸபையிலுள்ள ஸகல ஜனங்களாலும் ஏகமனதாய் இந்த மசோதா கூடாதென்று அழுத்தமாகக்கண்டிக்கப்பட்டு இந்தத் தீர்மானத்தை கனம் ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கனம் கவர்னர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

8—2—28ல் ஷியூர் ஸ்ரீநாகேச்வரஸ்வாமி கோவிலில் ஒரு மஹாஜனஸபை கூடிற்று. அதில் பிரும்மஸ்ரீ வக்கீல் மஹாலிங்க அய்யரவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். கவர்ன்மெண்டு காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர், ரா. வே. கிருஷ்ணமாசாரியார் அவர்கள், பிரும்மஸ்ரீ கோபாலதேசிகாசாரியார் அவர்கள், ஸ்ரீ மடம் ஆஸ்தானவித்வான் கவிரத்னம், ப. பஞ்சாபகேசசாஸ்திரியளவர்கள், இவ்வூர் ராஜா பாடசாலை ஹெட்மாஸ்டர், ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார் அவர்கள் வக்கீல் ஜி. வெங்கட்டராமய்யர், கே.சுந்தராமய்யர், ஸ்ரீமடம் ஏஜண்டு வக்கீல் குப்புஸ்வாமி அய்யர் முதலான பல ஜனங்கள் வந்திருந்தார்கள். முந்தி அக்ராஸனரவர்கள் இந்த மசோதாவினால் பலகஷ்டங்கள் ஏற்படுமென்றுவிரிவாய் உபந்யஸித்தபிறகு ரா. வே. கிருஷ்ணமாசாரியரவர்கள் சாஸ்திரங்களாலும் சிறந்த யுக்திகளாலும் இம்மசோதாவைக் கூடாதென்று கண்டித்தார்கள். கோபாலதேசிகாசார்யரும் சாஸ்திரீயமாகவும் லௌகிகமாகவும் இதுஹிந்துமதத்திற்கு அதிலும் பிராம்மணர்களுக்கு மிகவும் கஷ்டத்தையுண்டுபண்ணக்கூடியது. ஆகையால் இது கூடாதென்று அழுத்தமாய்க்கண்டித்தார். பிறகு ஏகமனதாய் இந்த மசோதாகூடாதென்று ஏற்பட்ட தீர்மானத்தை டில்லி ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

10-2-28 ல் இவ்வூர் சோலையப்பன் தெரு விசுவநாத ஸ்வாமி கோயிலில்இந்த மசோதா விஷயமாய் ஒருகண்டனக்கூட்டம் ஏற்பட்டது. பிரம்மஸ்ரீ வக்கீல் ஜகந்நாதாசாரியாரவர்கள், ஸ்ரீமடம் ஏஜண்டு வக்கீல் குப்புஸாமிஅய்யர் அவர்கள் மற்றும்அந்தத்தெருவிலுள்ள பிரமுகர்கள் ஆர்யதர்மம் பத்திராதிபர் ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் கோபலதேசிகாசாரியாரவர்கள், உமயாள்புரம் சுப்பிரமணிய சாஸ்திரியள், கோமளாம்பா பிரஸ் மானேஜர் முதலான பல ஜனங்கள் வந்திருந்தார்கள். அதில் பிரும்மஸ்ரீ ஜகந்நாதாசாரியாரவர்கள் அக்ராஸனம் வகித்து இந்த மசோதாவைப் பற்றி இது பல கஷ்டங்களுக்குக் காரணமாகுமென்று விரிவாய் உபன்யஸித்து முடிவில் இது கூடாதென்று கண்டித்தார்கள். பிறகு ப. பஞ்சாபகேசசாஸ்திரியள் இந்தமாதிரி மசோதாவை சட்டசபையில் கொண்டுவரவே மெம்பர்களுக்கு அதிகாரமில்லை என்பதை விஸ்தாரமாய் நிரூபித்து மற்றும் பல கஷ்டங்களிருப்பதால் இது கூடாதென்று தடுத்தார்கள்.பிறகு கோபாலதேசிகாசார்யரும் இந்த மசோதா நம் ஜாதிமதத்தை அடியோடு கெடுக்க வந்திருப்பதால் இது கூடாதென்று பல யுக்திகளாலும் பிரமாணங்களாலும் நன்கு மறுத்தார்கள். உடனே ஏகமனதாய் கண்டனம் நிறைவேறி கவர்ன்மெண்டுக்கு இந்த தீர்மானம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

12—2—28ல் ஷை ஊர் ஆதிகும்பேசுவரஸ்வாமி கோவிலில் மாலை 7-மணிக்கு பல பண்டிதர்களும் அனேகம் வக்கீல்களும் பல பிரபுக்களும் மற்றுமுள்ள தனவந்தர்களுமாக சுமார் 500 ஜனங்கள் கூடியிருந்தார்கள். இதில் அக்ராஸனம்வஹித்த பிரும்மஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யரவர்கள் இந்த மசோதா பலவிதத்தாலும் இந்துக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்குமேயல்லாமல் அற்பமேனும் ஸௌக்கியமேற்படாதென்று நன்கு உபன்யஸித்தார்கள். பிறகு பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியளவர்களும் சாஸ்திரமார்க்கத்திற்கும் சிஷ்டாசாரத்திற்கும் லோகக்ஷேமத்திற்கும் இது மிகவும் கெடுதலாகும். ஆகையால் இது கூடாதென்று கண்டித்தார்கள். இந்த அபிப்பிராயத்தையே சேங்காலிபுரம், வைத்திநாதசாஸ்திரியள், உமயாள்புரம் சுப்பிரமணியசாஸ்திரியள் முதலான மற்றும் சிலரும் எடுத்துக்கூறினார்கள். முடிவில் ஏகமனதாய் மசோதாவைக் கண்டிக்கவேண்டுமென்கிற தீர்மானம் நிறைவேறி இந்தத் தீர்மானத்தை கனம் ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர்ஜனரல் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள், சுபம்!

வைதிகதர்மாபிமானி,

# விவாகவயதுமசோதா கண்டனக் கூட்டம்.

ஸ்ரீ காசீ ஹநுமந்தகட்டம் காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்களைச் சேர்ந்த சுகதேவ மடத்தில் ஸ்ரீபரமாசார்யாளுடைய ஆக்ஞையின்பேரில் 31-1-28 செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூடியது. "மீமாம்ஸாகேஸரீ" ப்ரும்மஸ்ரீ சின்னஸ்வாமி சாஸ்திரிகள் மீமாம்ஸா ப்ரொபஸர் ஹிந்து யூனிவர்ஸிடி, பெனாஸ், அக்கிராஸனம் வகித்தார்கள். ஹநுமந்தகட்டம் கேதாரகட்டத்திலுள்ள தெலுங்க கர்னாடக திராவிட ஜனங்கள்எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அதில் மகாமகோபாத்யாய பண்டித லக்ஷ்மண சாஸ்திரிகள், மகாமகோபாத்யாய பண்டித் அன்னதாசரணதர்கசூடாமணி, ப்ரொபஸர் காசீ ஹிந்து யூனிவர்ஸிடி பண்டிட் ஸ்ரீகண்டசாஸ்திரிகள், பண்டித் ராஜேஸ்வர சாஸ்திரிகள் பிரின்ஸிபால் ஸாங்கவேத வித்யாலயம், காசீ, இவர்கள் முதலிய அனேக பெரிய பண்டிதர்களும் பிரஸந்நமாயிருந்தார்கள்.

முதலில் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீகண்டசாஸ்திரிகள் இந்த பில்லினுடைய உத்தேசமானது நம்முடைய சாஸ்திரங்களுக்கு முற்றிலும் விருத்தமானது என்பதை ஸம்ஸ்கிருதத்தில் உபந்யஸித்தார்கள். பிறகு ப்ரம்மஸ்ரீ ராஜேஸ்வரசாஸ்திரிகள் (பண்டித ம. ம. லக்ஷ்மணசாஸ்திரிகள் அவர்களுடைய புத்திரர்) இந்த பில்லானது நம்முடைய தேசத்துக்கு ஒரு விதத்திலும் ஸௌகர்யத்தை உண்டுபண்ணக்கூடியதில்லையென்றும், ஸர்வவிதத்திலும் ஸ்வாதந்திரியத்தைக் கோரும் நம்மவர்களே நம்முடைய ஸ்வாதந்திரியத்தை அபகரிக்கக்கூடிய இந்த பில்லை கொண்டுவருவது மிகவும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது என்றும் இன்னும் அனேக விதமான யுக்திகளினாலும் கேழ்ப்போர் வியக்கும்படி இனிமையான ஸம்ஸ்கிருதத்திலேயே உபந்யஸித்தார். மற்றும் சில முக்கியமான பண்டிதர்களும் இவ்விஷயத்தைப்பற்றியே ஹிந்தியிலும் பேசியதும் கடைசியில் அக்கிராஸனாதிபதி ஸ்ரீமடத்திலிருந்து தனக்குவந்த ஸ்ரீமுகத்தைப் படித்துக்காண்பித்து இந்த பில்லினால் நம்ம தேசத்துக்குண்டாகும் அனர்த்தங்களையும் இதனால் ஸ்திரீகளுக்கு டாக்டர்கள்மூலம் உண்டாகப்போகும் கெடுதிகளையும், அவமானங்களையும், இதனால் குடும்பங்கள் வியாஜ்யத்தினால் மிக

வும் கஷ்டப்படவேண்டிவரும் என்பதையும், போலீஸாருக்கு லஞ்சங்கொடுப்பதிலேயே அளவிலாப்பணச்சிலவு ஏற்படும் என்பதையும் மிகவும் தெளிவாய் தமிழிலேயே எல்லோருமறிந்து வியக்கும்படி எடுத்துரைத்ததுடன் டில்லி சட்டசபையில் ஸ்ரீ ஹரி விலாஸ் சாரதா கொண்டுவரும் பில்லானது நம்முடைய குழந்தைகளுடைய அனந்தர பாத்யதையை மாத்திரம் அபகரிப்பதாய் இருக்கிறது. சென்னை சட்டசபையில் ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்போகும் பில்லானது மிகவும் கொடுமையை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது என்பதையும் விரிவாயுரைத்தார்.

பிறகு எல்லோரும் ஒரே மனதாய் அடியிற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்கள்.

தீர்மானம் பின்வருமாறு:—

(1) டில்லி சட்டசபையில் ஸ்ரீ ஹரிவிலாஸ்சாரதா அவர்களாலும் சென்னை சட்டசபையில் ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மி அம்மா அவர்களாலும் கொண்டுவரப்போகும். ஸ்திரீ புருஷர்களது விவாகவயதை உயர்த்தும் சட்டத்தை இந்த சபை முற்றிலும் கண்டித்துஇந்தசட்டத்தினுல்நம்இந்தியாதேசத்தியஸனுதனதர்மிகளுக்கு அனேகவித கஷ்டங்கள் ஏற்படுவதாயிருப்பதால் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி அவர்களின் வாக்கியத்தை மனதில் வைத்துக்கொண்டு இதைச்சட்டமாக்கக்கூடாதென்று இச்சபை அரசாங்கத்தை வேண்டுகிறது.

(2) இத்தீர்மானத்தின் நகலை மாட்சிமைதங்கிய ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் தந்திமூலமாய் அனுப்பும்படி இச்சபை அக்கிராஸனுதிபதி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

பிறகு அக்ராஸனர் அவர்கள் இவ்விதம் ஆங்காங்கு ஸ்ரீமுகம் அனுப்பி மீடிங்கு மூலமாயும் மற்றும் அனேகவிதமாயும் நம்முடைய ஸநாதனதர்மத்தை நிலைநிறுத்துவதையே தம்முடைய முக்கிய உத்தேசமாய்க்கொண்டு யாத்திரை செய்துவரும் நம்முடைய ஆசார்யவர்யாளான ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் அவர்களுக்கு முழுமனதுடன் வந்தனங்கூறினர். பிறகு சபையோருக்கு வந்தனங்கூறி சபை கலைந்தது.

N. சுந்தரேசசாஸ்திரி.